Regd. No. 2514 Swadesamitran Illustrated Weekly


## மகாத்மா காந்தி நூல்கள்.

( சங்கு பிரசுரங்கள் )

**சத்திய சோதனை (முதற் பாகம்) ... ரூ. 1—8.**
**ஷை (இரண்டாம் பாகம்) ரூ. 2.**
மகாத்மா காந்தி தம் சுய சரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார். இந் நூலை வாசிப்பவர்களை நேரிய வாழ்வு நடத்துமாறு தூண்டும். 2-பாகங்களுக்கு 812-பக்கங்கள் கொண்டது.

**அனாஸக்தி யோகம் ... அணா 10.**
பகவத் கீதைக்கு மகாத்மா எழுதிய மொழி பெயர்ப்பு.

**இல்லறமும் பிரம்மசரியமும் ... அணா 8.**
கர்ப்பத் தடை முறைகளைக் கண்டித்து, இந்திரிய நிக்ரஹத்தையும், அஹிம்ஸையின் தத்துவத்தையும் விளக்கி, மகாத்மாஜி எழுதியிருக்கும் உயர்ந்த கட்டுரைகள் அடங்கியது.

**ஆரோக்கிய வழி ... அணா 10.**
சாமான்யமாக ஒவ்வொருவரும் தேகாரோக்கிய சம்பந்தமாகக் கட்டாயம் தெரிந்து கொள்ள பல விஷயங்களை இதில் காந்திஜி விஸ்தரிக்கிறார்.

**ஹிந்து தர்மம் ... அணா 4.**
ஹிந்து சமயத்தின் பற்பல அரிய தத்துவங்களை இலகுவாக எவருக்கும் மனதில் பதியத்தக்கவிதமாக மகாத்மா எழுதியுள்ள பலவியாஸங்கள் அடங்கியுள்ள நூல்.

**மகா தியாகம் ... அணா 4.**
"தாழ்த்தப்பட்ட வகுப்பினராகக் கருதப்பட்டு ஹரிஜனங்களாகிய வாயில்லா ஜீவன்கள் வாழவேண்டியதற்காக என் உயிரைத் தியாகம் செய்ய முகமலர்ச்சியோடு சாக நான் தயாராயிருக்கிறேன். சாகும் வரையில் பட்டினிகிடப்பேன்" என்று மகாத்மா காந்தியடிகள் 1932-ம் வருடம் செப்டம்பர்மாதம் 13-ந்தேதி விரதம் பூண்ட உபவாஸ சரித்திரம்.

**உத்தம வாழ்க்கை ... அணா 4.**
"பகவத்கீதைபோல் பாராயணம் செய்யத்தக்க நூல்" என்று "மாடர்ன் ரிவ்யூ" இதைப்பற்றி மதிப்புரை தந்தது. மகாத்மா எர்வாடாச் சிறையினின்று சபர்மதி ஆசிரம வாசிகளுக்குச் செய்த பல அரிய உபதேசங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

**மானேஜர்,**

**"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.**


Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B.A.

# சுதேசமித்திரன்

Vol. 13 No. 12 19-4-42 வாரப்பதிப்பு Price 2 Annas.




இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு ஆரோக்கியத்தைத்

தரும்

வுட்வார்ட் வைத்தியனில்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND



# சுதேசமித்திரன்.

வாரப் பதிப்பு :: 19-4-'42


## நிராகரித்த காரணம்

காங்கிரஸ் காரியக்கமிட்டி முடிவு வெளியாகியிருக்கிறது. ஸர் கிரிப்ஸ் திட்டம் நிராகரிக்கப்பட்டுவிட்டது. சென்ற பதினைந்து தினங்களாக நடந்து வந்த விவாதங்கள் பயன்படாமல் போயிற்று. பேச்சு வார்த்தைகளின் கடைசி பாகத்தில் அமெரிக்க ஜனாதிபதியின் தூதரும் கலந்துகொண்டார். அவர் காட்டிய அக்கரையும் நிலைமையைச் சீர்படுத்தவில்லை.

### காரியக்கமிட்டித் தீர்மானம்

காங்கிரஸ் காரியக் கமிட்டி கிரிப்ஸ் திட்டத்தை ஏற்க மறுத்த காரணங்களைப் பின்வருமாறு விளக்கியிருக்கிறது:—

இந்தியா விஷயமாக பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்ட யோசனைகளையும் ஸர் கிரிப்ஸ் செய்த விளக்கத்தையும் காரியக் கமிட்டி தீர்க்கமாக ஆலோசனை செய்தது. நிலைமையே குழம்பியிருக்கும் இந்த கடைசி சமயத்தில் இவ்வாலோசனைகளை வெளியிட்டிருப்பதால் இதை இந்தியாவின் சுயேச்சை கோரிக்கையை அநுசரித்து மட்டுமின்றி யுத்த நெருக்கடியை அநுசரித்தும் கவனிக்க வேண்டியிருக்கிறது. அப்போதுதான் இந்தியாவுக்கு ஏற்பட்ட தொல்லையைச் சரிவர தவிர்க்கமுடியும். 1939-ம் வருஷம் யுத்தம் ஆரம்பித்ததிலிருந்தே உலகத்திலுள்ள மூற்போக்குள்ள நாட்டினருடன் இந்தியர் ஒத்துழைக்கத் தயார் என்றும். புதிய பொறுப்பை ஏற்கச் சித்தம் என்றும், ஆனால் அதற்கான ஒரு நிலையை உண்டுபண்ண சில நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். அவற்றில் முக்கியமான நிபந்தனை இந்தியாவுக்கு சுதந்தரம் அளிக்க வேண்டுமென்பதேயாகும். சுதந்தரம் பெற்ற இந்தியாதான் நாட்டின் பாதுகாப்புக்கான வழி

**அமெரிக்க ஜனாதிபதியின் தூதர்**

கர்னல் லூயி. ஏ. ஜான்ஸன் யுத்த சப்ளை சம்பந்தமாக இந்திய அதிகாரிகளுடன் கலந்து பேச ஒரு தூதுக் கோஷ்டியை அழைத்து வந்திருக்கிறார். சமீபத்தில் ஸர் க்ரிப்ஸுக்கும் இந்தியத் தலைவர்களுக்கும் நடந்த சம்பாஷணைகளில் கலந்து கொண்டார். இவர் அமெரிக்காவின் மாஜி உதவி யுத்த மந்திரி.

# டில்லி சம்பாஷணைகள் முறிவு

தேடமுடியுமென அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் சென்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறோம்.

### "முரண்பட்டதாகும்"

பிரிட்டிஷ் யுத்த மந்திரி சபையின் திட்டங்கள் யுத்த முடிவுக்குப் பிறகு இருக்கக்கூடிய நிலைமையைப் பொறுத்ததாகவிருக்கின்றன. இந்திய மக்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டென்பதைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருப்பதைக் காரியக் கமிட்டி அங்கீகரிக்கிறது. சுதந்திரத்துடனும் ஒற்றுமையுடனும் தேசம் அபிவிருத்தி அடைவதற்கும் ஜனநாயக முறையில் சர்க்கார் அமைவதற்கும் ஹானி உண்டாக்கும்படியான சில ஷரத்துகள் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதற்காகக் கமிட்டி வருந்துகிறது. அரசியலைத் தயாரிக்கும் சபையில் பிரதிநிதித்வமற்றவர்களைச் சேர்ப்பதன் மூலம் இந்திய மக்களின் சுய நிர்ணய உரிமையை உபயோகமில்லாமல் செய்யப்படுகிறது. இந்தியாவுக்குப் பூர்ண சுயேச்சை வேண்டுமென்று இந்தியர்கள் ஒருமுகமாகவும் தெளிவாகவும் கோரிக்கை தெரிவித்தார்கள். தற்போதைய நிலைமையைச் சமாளிக்க பூர்ண சுயேச்சையைத் தவிர வேறு எந்த விதமான அந்தஸ்தையும் ஒப்புக்கொள்ள முடியாது என்று காங்கிரஸ் திரும்பத் திரும்ப எடுத்துரைத்திருக்கிறது. எதிர்காலத்திய சுயேச்சையைப்பற்றி திட்டத்தில் தெளிவாக அடங்கியிருக்கலாம். ஆனால் திட்டத்திலுள்ள ஷரத்துகளும் கட்டுப்பாடுகளும் உண்மையான சுயேச்சை வெறும் பிரமையென்றுதான் கருதும்படி இருக்கின்றன. இந்திய சமஸ்தானங்களிலுள்ள 9 கோடி ஜனங்களையும் பொருட்படுத்தாமல் அவர்களை மன்னர்களின் பொறுப்பில் விட்டு விடுவதானது, ஜனநாயகம் சுய நிர்ணய உரிமை இவை இரண்டுக்கும் முரண்பட்டதாகும். சமஸ்தானங்கள் அவற்றின் ஜனத்தொகையை ஆதாரமாகக் கொண்டு அரசியல் நிர்ணய சபைக்குப் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அப்பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்க சமஸ்தானப் பிரஜைகளுக்கு வசதி இல்லை. சமஸ்தானப் பிரஜைகளை முக்கியமாகப் பாதிக்கும் விஷயங்களில் முடிவுகள் செய்யும் எந்தச் சமயத்திலும் அவர்களைக் கலந்து கொள்ளவேண்டிய அவசியமுமில்லையென்றிருக்கிறது. இது போன்ற சமஸ்தானங்கள் சுதந்திர வளர்ச்சிக்கு அநேக விதங்களில் தடையாகும். இது சமஸ்தானப் பிரஜைகளின் சுயேச்சைக்குமட்டுமின்றி இந்தியாவிலுள்ள இதர பகுதியினருக்கும் நிரந்தரமான ஆபத்தாகும்.

### "ஒற்றுமைக்குக் கேடானது"

இந்திய யூனியனில் ஒரு மாகாணம் சேராதிருக்கலாம் என்ற நூதன கொள்கையை முன்னதாக ஒப்புக்கொள்வது இந்திய ஒற்றுமைக்கு பெரிய கேடாகும். இது